இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 196 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – மாசி 14 – வியாழக்கிழமை 26 பிப்ரவரி 2026 – சென்னை 24 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 196: Thiruvalluvar Year - 2057 - Maasi 14 - Thursday 26 February 2026 - Chennai 24 Pages ₹ 5.00



## பா.ஜ.க. எப்போதுதான் வன்முறையைவிட்டு வளர்ச்சியைப் பற்றி பேசும்?

# கன்னியாகுமரி மாவட்ட வளர்ச்சிக்கு கணக்கில்லாத் திட்டங்கள்!




## திட்டச் செயல்பாடுகளையும் பயன்களையும் விளக்கி நாகர்கோவில் அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேருரை!

**நாகர்கோவில், பிப். 26 -**

**நாகர்கோவிலில் நடைபெற்ற அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது, கன்னியாகுமரி மாவட்ட வளர்ச்சிக்கு கணக்கில்லாத் திட்டங்களை நிறைவேற்றியிருப்பதாகக் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.2.2026) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு, ஆற்றிய உரை வருமாறு:-

கன்னியாகுமரி மாவட்ட அரசு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இந்திய துணைக்கண்டத்தின் தொடக்கமான வள்ளுவ முனை இருக்கும் குமரி முனைக்கு நான் வந்திருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், தனித்துவமான பண்பாடு, உணவு, வட்டார வழக்கு, கொட்டிக் கிடக்கும் இயற்கை அழகு நிறைந்திருக்கக்கூடிய மாவட்டம் இந்த மாவட்டம்.

எல்லைப் போராட்ட வீரர் மார்ஷல் நேசமணி, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், பொதுவுடைமை இயக்க தீரர் தோழர் ஜீவா, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை இப்படி பல பேராளுமைகளை கொண்டிருக்கக் கூடிய பல்வேறு தலைவர்களை தந்த மாவட்டத்திற்கு நான் வந்திருக்கிறேன்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.2.2026) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் நடைபெற்ற அரசு விழாவில், 632 கோடியே 35 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் செலவிலான 1,217 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 294 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 1,237 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் திருமதி பி.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், த.மனோ தங்கராஜ், முனைவர் டி.ஆர்.பி.ராஜா, விஜய் வசந்த் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.ஜி.பிரின்ஸ், எஸ்.ராஜேஷ்குமார், திருமதி தாரகை கத்பர்ட், மேயர் மகேஷ், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆர்.அழகுமீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அதுமட்டுமல்ல, இன்று அறிவியலில் சிறந்து இஸ்ரோ அமைப்புக்கு எத்தனையோ தலைவர்களை தந்த கன்னியாகுமரிக்கு நான் வந்திருக்கிறேன். இப்படி பல்வேறு பெருமைகள் கொண்ட மாவட்டத்தில், இந்த விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறார் நம்முடைய அமைச்சர் மனோ தங்கராஜ் அவர்கள். பால்வளத்துறையை சிறப்பாக கவனித்துக் கொள்ளக்கூடிய ஒரு வெள்ளை உள்ளத்திற்கும், கொள்கை திறத்திற்கும் சொந்தக்காரரான அவருக்கு பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

### சிறப்பாக செயல்படும் மாவட்ட ஆட்சியருக்கு வாழ்த்துகள்!

அதேபோல், இதுவரை எந்த மாவட்டத்திலும் இல்லாத வகையில், 3 இலட்சத்து 12 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கக்கூடிய இந்த மாபெரும் விழாவை மிகுந்த எழுச்சியோடு, சிறப்பாக ஒருங்கிணைத்திருக்கக்கூடிய நம்முடைய மாவட்டத்தின் ஆட்சியர் திருமதி அழகுமீனா, அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்கள்! வாழ்த்துகள்! சிறப்பாக செயல்படுகின்ற மாவட்ட ஆட்சியர்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவிற்கு முத்திரை பதிக்கும் வகையில் அவர் செயல்படுகிறார். உங்களுடைய கரவொலியைப் பார்த்தாலே அதற்கு சாட்சியாக இருக்கிறது. இன்னும் கொஞ்சம் பலமாக கரவொலி எழுப்பி அவருக்கு நம்முடைய வாழ்த்துகள் சொல்ல வேண்டும்! அவருக்கும், அவருக்குத் துணை நிற்கக் கூடிய மாவட்ட அரசு அலுவலர்களுக்கும், அத்தனை பணியாளர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்!

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்





தமிழ்நாடு அரசு — வாய்மையே வெல்லும்

## நாடு போற்றும் தியாகிகள், அறிஞர்களின் திருவுருவச்சிலைகள் திறந்துவைத்தல்

மற்றும்

## 22 சேலம் சிறைத் தியாகிகள் நினைவுத்தூண் மண்டபம் அடிக்கல் நாட்டுதல்

காணொலிக்காட்சி வாயிலாகத் திறந்துவைத்து அடிக்கல் நாட்டுபவர்

# திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



மேனாள் குடியரசுத் தலைவர்
சர்வபள்ளி
டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள்
திருவுருவச்சிலை
அ/மிகு சுப்பிரமணிய சுவாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருத்தணி



மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை
அவர்கள் திருவுருவச்சிலை மற்றும் அரங்கம்
மயிலாடுதுறை



சுதந்திரப் போராட்டத் தியாகி
சாமிநாகப்பன் படையாட்சி
அவர்கள்
திருவுருவச்சிலை
தரங்கம்பாடி சாலை,
மயிலாடுதுறை.



22 சேலம் சிறைத் தியாகிகள்
நினைவுத்தூண் மண்டபம்

நாள்: 26.2.2026, வியாழக்கிழமை
நேரம்: காலை 10.30 மணி
இடம்: தலைமைச் செயலகம்,
சென்னை.



தமிழ்மொழித் தியாகி
வை.நாடிமுத்துப்பிள்ளை
அவர்கள்
திருவுருவச்சிலை
நாடியம்மாள்புரம், பட்டுக்கோட்டை,
தஞ்சாவூர் மாவட்டம்

செ.ம.தொ.இ / 229 / வரைகலை / 2026

வெளியீடு: இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, சென்னை–600 009